முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 229/2018

வா.சா.2 தனலட்சுமி

1 மற்றும் 2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை 20-10-2021

எனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். எனது தற்போதைய வயது என்ன என்றால் 50 வயதாகிறது. 2018 ம் வருடம் நான் வழக்கு தாக்கல் செய்தபோது எனது வயது 53 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது பள்ளி மாற்றுச் சான்றிதழ் வா.சா.ஆ.7 ல் எனது பிறந்த தேதி 13.3.1978 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது ஆதார் அட்டை வா.சா.ஆ.4 ல் எனது பிறந்த தேதி 16-5-1965 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா,சா.ஆ.4, 7 ஆகிய ஆவணங்களிலும் இவ்வழக்கின் வழக்குரையிலும் மற்றும் பிரமாண வாக்னுகுமூலத்திலும் நான் எனது பிறந்த தேதியை வேறு வேறு தேதிகளாக குறிப்பிட்டுள்ளேன் என்றும் உண்மைத் தன்மை இல்லாதாக் காரணத்தினால் தான் நான் எனது பிறந்த தேதியை மாற்றி மாற்றி கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2 ம் வாதி சசிகலா எனது அக்கா என்று சொன்னால் சரிதான். அவர் என்னை விட எத்தனை வயது பெரியவர் என்றால் 4 வருடங்கள் பெரியவர். 2018 ல் நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சசிகலாவின் வயது 40 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என் அக்காவின் ஆதார் அட்டை வா.சா.ஆ.3 ல் அவரின் பிறந்த தேதி 15-4-1978 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது அக்காவின் பிறந்த தேதியாக வா.சா.ஆ.4 ல் குறிப்பிடப்பட்டுள்ள 1978 ம் வருடத்தில் தான் நான் பிறந்ததாக எனது பள்ளி மாற்றுச் சான்றிதழலான வா.சா.ஆ.7 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உண்மை தன்மை அற்றது என்பதால் தான் என்னுடைய பிறந்த தேதிக்கும் என் அக்காவின் பிறந்த தேதிக்கும் இடையே ஒரு மாத இடைவெளி

தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 என் அம்மாவின் ஆதார் அடையாள அட்டையில் அவரது பிறந்த தேதியாக 10-6-1955 ம் தேதி காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது ஆதார் அட்டை வா.சா.ஆ.4 மற்றும் என் அம்மாவின் ஆதார் அட்டையான வா.சா.ஆ.2 ஆகிய ஆவணங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது என்னை விட என் அம்மா 10 வருடங்கள் மூத்தவராக காணப்படுகிறார் என்று சொன்னால் சரியல்ல. 10 வயதில் ஒரு நபருக்கு குழந்தை பிறக்க வாய்ப்பில்லை என்றும் அதனால் என் பிறந்த தேதி பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆன ராகவன் என்பவரின் இறப்புச் சான்றிதழில் அவரது கதவு எண் 2/738 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4 ல் எனது கதவு எண் 2/793 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ராகவன் என்பவர் கதவு எண் 2/738 ல் இறந்துள்ள நிலையில் அவர் எனது வீட்டில் இறந்தார் என்று பிரமாண வாக்குமூலத்தில் நான் பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்குரையில் ராகவன் என்பவர் என் வீட்டில் இறந்தார் என்று குறிப்பிடாமல் முதல் முறையாக பிரமாண வாக்குமூலத்தில் அவர் என் வீட்டில் இறந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் இறந்து போன ராகவனின் மனைவி மனோகரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் என் அக்காவின் பிறப்புச் சான்றிதழையும் எனது பிறப்புச் சான்றிதழையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கும் என் அக்காவிற்கும் பிறப்புச் சான்றிதழ் உள்ளதா என்றால் இல்லை. பள்ளி மாற்றுச் சான்றிதழ் தான் உள்ளது. எனக்கும் என் அக்காவிற்கும் பிறப்புச் சான்றிதழ் உள்ளதாக என் தாயார் கூறியிருந்தால் அது தவறான சங்கதி என்று சொன்னால் சரியல்ல. எங்களிடம் இல்லை. அவரிடம் உள்ளதா இல்லையா என்று எனக்கு தெரியவில்லை. எனது பிறப்புச் சான்றிதழ் மற்றும் என் அக்காவின் பிறப்புச் சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை நிலை தெரிய வந்துவிடும் என்ற காரணத்தினால் நாங்கள் அவற்றை தாக்கல் செய்யவில்லை

என்று சொன்னால் சரியல்ல. எனது பள்ளி மாற்றுச் சான்றிதழ் வா.சா.ஆ.7 ஆவணத்தில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் என்ற இடத்தில் யாருடைய கைரேகை உள்ளது என்றால் எனது பாட்டியின் கைரேகை உள்ளது. என் பாட்டியின் பெயர் என்ன என்றால் நாகம்மாள் ஆகும். அவர் எந்த வகையில் எனக்கு பாட்டி என்றால் 1 பிரதிவாதி மனோகரியை எடுத்து வளர்த்தவர் ஆவார். இறந்துபோன ராகவனின் பாதுகாப்பில் நான் இருந்திருந்தால் எனது பள்ளி மாற்றுச் சான்றிதழில் அவர் கையொப்பம் செய்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. என் அம்மாவிற்கும் இறந்துபோன ராகவனுக்கும் திருமணம் நடைபெற்றதற்கான எந்த ஆவணத்தையும் நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அம்மா தான் ராகவனின் முதல் மனைவி என்பதைக் காட்டுவதற்கும் எந்த ஆவணத்தையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று செவான்னால் சரிதான். என் அம்மா தேனி மாவட்டம் அனுமந்தப்பட்டியில் வாழ்ந்து வருவதாக வா.சா.ஆ.2 ல் காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என் அக்காவின் ஆதார் அட்டையான வா.சா.ஆ.3 ல் அவர் பல்லடத்தில் வசித்து வருவதாக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்களில் ராகவன் என் தகப்பனார் என்று காட்டப்படவில்லை என்று சொன்னால் சரிதான். திருமணமான காரணத்தினால் எங்கள் இருவரின் கணவர் பெயர் தான் காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 என் அக்காவின் பள்ளி அடையாள அட்டையில் அவர் உசிலம்பட்டியில் படித்ததாக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.7 எனது பள்ளி மாற்றுச் சான்றிதழில் நான் மதுரை மாவட்டத்தில் கம்பத்தில் படித்ததாக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வாதிகளான நாங்கள் திருப்பூரில் வசிப்பதற்கான எந்த ஆதாரத்தினையும் தாக்கல் செய்யாத காரணத்தினால் இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன ராகவனின்

பெயரில் உள்ள வீடு 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளின் உழைப்பில் வாங்கப்பட்டது என்றும் அதனால் அதில் உரிமை கோர எங்களுக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வீட்டை அடமானம் வைத்து ராகவன் கடன் வாங்கினார் என்றும் அதன்பேரில் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. வங்கியில் மேற்படி வீட்டை அடமானம் வைத்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்து சொத்தை அவர் பணம் செலுத்தி மீட்ட விவரம் தெரியும். 1 ம் வாதி இறந்துபோன ராகவனின் மனைவி அல்ல என்றும் 2 மற்றும் 3 ம் வாதிகள் அவரது குழந்தைகள் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. இறந்து போன ராகவனுக்கு 1 ம் பிரதிவாதி தான் ஒரே மனைவி ஆவார் என்றும் 2 ம் பிரதிவாதி தான் ஒரே மகள் ஆவார் என்றும் சொன்னால் சரியல்ல. இறந்துபோன ராகவன் தேனி மாவட்டம் அனுமந்தப்பட்டியில் குடியிருந்து வந்தபோது நாங்கள் அவருக்கு பக்கத்து வீட்டுக்காரர்களாக இருந்தோம் என்றும் எங்களுக்கு தந்தை இல்லாத காரணத்தினால் அவர் எங்களுக்கு உதவி வந்தார் என்றும் அதை பயன்படுத்தி அவரது சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவர் தான் எங்கள் தந்தை என்று குறிப்பிட்டு பொய்யாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் மட்டும் தான் இறந்துபோன ராகவனின் சட்டப்படியான வாரிசுகள் என்றும் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

3 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் எத்தனை வருட காலமாக வீரபாண்டியில் குடியிருந்து வருகிறோம் என்றால் 15 வருடங்களாக குடியிருந்து வருகிறோம். என் தந்தையின் தந்தை உயிருடன் உள்ளாரா இல்லையா என்ற விவரத்தை வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர் இறந்துவிட்டார். என் தந்தையின் மாநிலம் கேரளா என்று சொன்னால் சரிதான். எங்களுக்கும் சொந்த மாநிலம் கேரளா என்று சொன்னால் சரியல்ல. என் அம்மா மற்றும் அப்பா

ஆகியோர் கேரளாவினை சேர்ந்தவர்கள். அவர்கள் தேனிக்கு வந்து வாழ்ந்த போது நாங்கள் பிறந்துள்ளோம். என் அப்பாவின் சொந்த மாநிலம் கேரளா என்ற காரணத்தினால் அங்கு தான் நாங்கள் வாரிசு சான்றிதழ் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது,

G BHARATHI PRABHA

Digitally signed by G BHARATHI PRABHA
Date: 2021.10.20 13:13:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.